ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

15.05.2025

1. வாழ்க வாழ்க உலக பெருமக்கள்
வளர்க வளர்க என் தொண்டர் படைகள்
ஊழ்வெல்லும் மகா சூட்சுமத்தை
உயர்வான ஓங்கார குடில் படைத்து அரங்கன்

2. அரங்கன் யான் அற்புதம் நிகழ்த்த
அருட்சுவடிவழி விசுவாவசு விடை திங்கள்
வரங்களென முதல் குருவார அருளாசி
வழங்க வந்தேன் மக்களை நோக்கி

3. நோக்கியே அரங்கனுக்காய் நிலவுலகில்
நீங்கள் செய்த குருபூசை விழா
ஆக்கமுடன் ஞானியர்கள் மேலவர்கள்
ஆறுமுகனார் வேழமுகனார் மகா சக்திகளென

4. என அனைவரும் வியந்து மகிழ்ந்து
எல்லா வரமும் தந்தருளியிருக்க
ஞானதேசிகன் யானும் மகிழ்ந்தே
நல் அருளாசியாக வரம் தருகின்றேன்

5. தருகவே என் மக்கள் ஞானவான்கள்
தருமவான்களென தனி அடையாளம்
பேருலகம் எல்லாம் பரவி வர
புண்ணிய பூமியாக உலக மாற்றம்

6. மாற்றம் நிகழப் போகுதப்பா
மரணம் வெல்லும் மகா வரம்
ஆற்றலாக என் தொண்டர்கட்கு
அரங்கன் யான் தரப் போகிறேன்

7. ஆகவே அப்பா தொண்டர்கள்
அனைவரும் கொண்ட சரணாகதி
மிகையாக இருக்க நாளும்
மகான்கள் மேலான பூசைதனை தொடர்ந்து

8. தொடர்ந்து செய்து கொண்டு
தொடர்பை தரும வழியில்
தடையற கூட்டி நின்று
தருமவான்களாக தகுதி பெருக்கிட

9. பெருக்கிட யாவர்க்கும் வரம்
பிசகின்றி சித்தி ஆகியே
கருத்தாக உலக மக்களெல்லாம்
கந்தவேலன் நடத்தும் வாசிவசம்

10. வசமாகி தேகம் வஜ்ரமாகி
வானவர்கள் போலே அழியாமை
வசம் கண்டு மரணம் வெல்வர்
வள்ளலும் ஆறுமுகப் பெருமானும் அருள

11. அருளவே அரங்கன் சீடர்களென
அடையாளம் கொண்டால் போதும்
மறுமை மரணம் கடந்து நிற்பர்
மகான் அரங்கன் யான் மொழிந்த
குருவார அருளாசி முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி